THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 21st December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Emoluments of the Non-gazetted Officers in the State

*9 [S.N.] *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are aware that the Non-gazetted Officers' Association is not satisfied with the recent enhancement of emoluments announced by the Finance Minister and that the Association has decided upon protest action;

(*b*) whether the Government have made representations to the Central Government for assistance for further improving the emoluments of the employees under the State Government; and

(*c*) if so, what the proposals are?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes.

(*c*) Attention is invited to paragraph 5 of my budget speech presenting the budget for the year 1957–58.

SRI M. KALYANASUNDARAM : மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்குக் குறைகளைத் தீர்க்கவேண்டும், அவர்களுடைய குறைகள் என்ன என்பதைப்பற்றி எல்லாம் என்ன என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கான விவரங்கள் ஒன்றும் அவருடைய பிரசங்கத்தில் இல்லை. மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படுகிற பஞ்சப்படி, சம்பளம் போலவே ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் கொடுக்கவேண்டுமென்பதை மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறார்களா ? மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பது போலவே ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் கொடுக்க மத்திய சர்க்கார் பண உதவி செய்யும் என நம் சர்க்கார் நம்புகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உடனடியாக சம்பள விகிதத்தையும், பஞ்சப்படி விகிதத்தையும் மத்திய சர்க்கார் அளவுக்கு நம் ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கு உயர்த்த முடியும் என்று நம்பவில்லை. அது முடியாத காரியம். உடனடியாக ஏதாவது நிவாரணம் அளிக்க முடியுமா ? பிற்பாடு நீண்டகால பிரச்சனையாக அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற என்ன சாத்தியங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி பிரச்சனைதான் ஆலோசனையில் இருக்கிறது. தற்போது எவ்வளவு நிவாரணம் அளிக்க முடியும் என்பதைப் பற்றித்தான் அவர்களும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

SRI S. PANCHAKSHARAM CHETTIAR : Sir, I should like to know from the Hon. Minister whether the Non-gazetted Officers'

Association is organized on trade union lines with a recognized right for taking direct action and, if so, whether the Government are prepared to meet any such contingency.

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. It is not recognized on trade union lines.

SRI M. PALANIYANDI : இன்று மத்திய சர்க்காரைக் கலந்து கொண்டு ராஜ்ய சர்க்கார் பன்னிரெண்டு ரூபாய் ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளின் ஊதியத்தை உயர்த்த யோசனையில் இருப்பதாக செய்தித்தாளில் இருந்து தெரிய வருகிறது. அதுவும் அந்தப் பன்னிரண்டு ரூபாயில் 50 பர்சன்ட் தான் மத்திய சர்க்கார் உதவி செய்யும் என்றும், பாக்கி 50 பர்சன்ட் சர்க்கார் தான் கொடுக்கவேண்டும் · என்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியானால் முன்பு நம் ராஜ்ய சர்க்கார் கொடுத்திருக்கும் 5 ரூபாயோடு இந்தப் பன்னிரெண்டு ரூபாயையும் சேர்த்து பதினேழு ரூபாய் கொடுப்பார்களா ? அல்லது "நாங்கள் முன்பே ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டோம். ஆகவே பன்னிரெண்டு ரூபாயில் பாதியாகிய ஆறில் முன்பு கொடுத்தது ஐந்து போக ஒரு ரூபாய் கொடுத்து விடுகிறோம்" என்பதாகச் சொல்லி விடுவார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எத்தனை ரூபாய் என்று இப்பொழுது திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. பன்னிரெண்டு ரூபாயா, ஐந்து ரூபாயா, பதினேழு ரூபாயா அல்லது எண்பது ரூபாயா என்பதைப்பற்றி இப்பொழுது என்ன சொல்லமுடியும் ? ஆனால் உடனடியாக என்ன நிவாரணம் அளிக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசனை செய்து வருகிறார்கள். அவர்களிடத்திலிருந்து இறுதியான தகவலைதெரிந்து கொண்ட பிற்பாடு தான் அதைப் பற்றி முடிவான ஏற்பாட்டைச் செய்யமுடியும்.

SRI M. KALYANASUNDARAM : மத்திய சர்க்காரிடமிருந்து இறுதியான தகவல் கிடைத்த பிறகு முடிவாக பதில் சொல்லலாம். ஆனால் நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன சிபார்சு செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்வதற்கு அவாகளிடமிருந்து இறுதித் தகவல் வந்த பிற்பாடு தான் சொல்லவேண்டுமென்பது இல்லை. ஆகவே நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன சிபார்சு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM ; நாங்கள் சர்க்கார் சிப்பந்திகளுடைய குறைகளை எல்லாம் எடுத்துக்கூறி அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கவேண்டுமென்பதையும் வற்புறுத்தி, மத்திய சர்க்காரின் உதவி இல்லாமல் ராஜ்ய சர்க்கார் எவ்வித உதவியும் அளிக்கக்கூடிய நிலைமையில் இல்லை என்பதாகவும்தான் எங்கள் சிபார்சில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

SRI A. RATNAM : ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு, மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் அடிப்படைச் சம்பளத்தைக் கொடுக்காவிட்டாலும் பஞ்சப்படியையாவது மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுப்பது போலவே கொடுக்கவேண்டுமென்பதாக நமது சர்க்கார் வற்புறுத்தி இருக்கிறதா ? தற்காலிகமாகவாவது மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படியைப் போலவே நமது சர்க்கார் சிப்பந்திகளுக்கும் கொடுக்க நமது சர்க்கார் யோசித்துவருகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி நான் முன்பே கூறியாகிவிட்டது.

SRI N. K. PALANISAMY : Sir, apart from the question of emoluments, will the Government consider the other demands of the Non-gazetted Officers, namely, the doing away with the practice of carrying files to the house of superiors and also not requiring them to work longer hours?

21st December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not aware of these demands made by the Non-gazetted Officers. I do not see how this question arises. The immediate question concerning everybody is the question of the dearness allowance and the pay structure. I do not think we should confuse the main issue by bringing in the minor issues.

SRI M. KALYANASUNDARAM : கடந்த கூட்டத்தில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தபோது "கிராம உத்தியோகஸ்தர்களுடைய கோரிக்கைகள் என்ன ஆயிற்று," என்று கேட்டோம். அப்போது "அவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதுசம்பந்தமாக மந்திரி சபை ஒரு சப்-கமிட்டி போட்டிருக்கிறது" என்றார்கள். அந்தக் கமிட்டியின் யோசனைப் பிரகாரம்தான் இப்பொழுது அவர்களுக்குச் சில சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா? அவர்களுக்குக் காட்டவேண்டிய சலுகை முடிந்துவிட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது நாங்கள் கொடுத்திருப்பது தற்காலிமாகக் கொடுத்திருக்கக்கூடிய நிவாரணம் தான். நான் என்னுடைய உரையில் கூறியிருக்கிற பிரகாரம் மற்ற கோரிக்கைகள் எல்லாம் சர்க்காருடைய ஆலோசனையில் இருந்து வருகிறது.

Accommodation in the Central Jail, Madras

* 388 Q.—SRI N. K. PALANISAMY (on behalf of Sri S. Pakkiriswami Pillai) : Will the Hon. the Minister for Finance be pleaesd to state— 9-10 a.m.

(a) the total number of prisoners to be kept in the Madras Penitentiary; and

(b) the present strength?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The accommodation in the Central Jail, Madras, is for 1,457 prisoners.

(b) The lock-up in the jail on 24th November 1956 was 2,235.

SRI N. K. PALANISAMY : May I know, Sir, whether there is any proposal to shift the penitentiary to some other place?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. A proposal is under consideration whether it would be feasible to shift the penitentiary to a place outside the City limits or anywhere else. But it is rather a difficult question to take a decision on. But this proposal is under the consideration of the Government.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் சொல்லும் பதிலிலிருந்து சிறையில் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. இதை நிவர்த்திப்பதற்கு இதை ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து இப்பொழுது இருக்கும் குறைகளை நீக்குவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்காகத்தான் முதல் ஐந்தாண்டு திட்டமும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் இருக்கின்றன, இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கிறது.